செய்தி வெளியீடு எண்:501 நாள்:26.10.2016

# செய்தி வெளியீடு

தமிழ்நாட்டில் பறவை காய்ச்சல் நோய் பரவாமல் தடுக்க முன்னெச்சரிக்கை நடவடிக்கை குறித்து ஆய்வு கூட்டம் இன்று 26.10.2016 தலைமை செயலகத்தில் மாண்புமிகு கால்நடை பராமரிப்புத்துறை அமைச்சர் திரு பா. பாலகிருஷ்ணா ரெட்டி அவர்களின் தலைமையில் நடைபெற்றது.

இந்தியாவின் பல்வேறு மாநிலங்களில் பறவை காய்ச்சல் பரவி வருவதாக செய்திகள் வந்து கொண்டிருப்பதை ஒட்டி, குறிப்பாக தமிழகத்தின் அன்டை மாநிலமான கேரளாவிலும் பறவை காய்ச்சல் பாதிப்பு கண்டறியப்பட்டிருப்பதாக செய்திகள் வந்து கொண்டிருப்பதாலும் இது தொடர்பாக மத்திய அரசிடமிருந்து அறிக்கை வரப்பெற்றவுடன், தமிழகத்தில் பறவை காய்ச்சல் நோய் தாக்கத்தை கட்டுப்படுத்தவும் நோய் பரவாமல் இருக்க அதனை தடுக்கும் வகையில் முன்னெச்சரிக்கையாக தேவையான அனைத்து தடுப்பு நடவடிக்கைகளையும் தமிழ்நாடு அரசின் கால்நடை பராமரிப்புத்துறை மூலம் மேற்கொள்ள வேண்டும் என்றும், மாநில எல்லைகளில் சோதனை சாவடி அமைத்து தடுப்பு நடவடிக்கை பணிகள் கண்காணிக்கப்பட வேண்டும் என்றும், தமிழகத்தில் உள்ள கோழிப் பண்ணைகளில் உயிரின பாதுகாப்பு நடவடிக்கைகளும், கோழிப் பண்ணையாளர்களுக்கு விழிப்புணர்வு பிரச்சாரம் மேற்கொள்ளவும், நோய்தடுப்பு முறைகளை கையாள பயிற்சி அளிக்க மாண்புமிகு கால்நடை பராமரிப்புத்துறை அமைச்சர் அவர்கள் அறிவுரை வழங்கினார்கள்.

அன்டை மாநிலமான கேரளா எல்லையில் சோதனை சாவடிகள் அமைத்து வாகன சோதனைகள் மேற்கொண்டு, தமிழகத்தில் நுழையும் அனைத்து வாகனங்களும் கிருமி நாசினி தெளித்து, நோய் வராத வண்ணம் 24 மணி நேரமும் முழுவீச்சில் செயல்படுத்த வேண்டும் என்றும், நமது மாநிலத்தை சோர்ந்த கோழிப் பண்ணையாளர்கள், கறிக்கோழி உற்பத்தியாளர்கள் அன்டை மாநிலமான கேரளாவிலிருந்து கோழிகள், வாத்துகள், முட்டைகள் / குஞ்சுகள் அவற்றினை வாங்குவதை தவிர்க்க விழிப்புணர்வு ஏற்படுத்த வேண்டும் என்றும், மாண்புமிகு கால்நடை பராமரிப்புத்துறை அமைச்சர் அவர்கள் ஆய்வு கூட்டத்தில் அறிவுறுத்தினார்கள்.

மேலும் அனைத்து மாவட்ட ஆட்சித் தலைவர்கள் பல்வேறு துறைகளின் ஒருங்கினைப்பு கூட்டங்களை இது தொடர்பாக நடத்தி தமிழகத்தில் பறவை காய்ச்சல் நோய் பரவாமல் இருக்க அனைத்து நடவடிக்கைகளும் துரிதமாக மேற்கொள்ளப்படவேண்டும் என்றும் அதிகாரிகளுக்கு அறிவுறுத்தினார்.

இந்த ஆய்வு கூட்டத்தில் கால்நடை பராமரிப்பு (ம) மருத்துவப் பணிகள் இயக்குநர் திரு. த. ஆபிரகாம் இ.ஆ.ப., கூடுதல் இயக்குநர் திரு. ஏ.வி. கிருஷ்ணன் மற்றும் உயர் அலுவலர்கள் கலந்து கொண்டார்கள்.

**வெளியீடு: – இயக்குநர்,** செய்தி மக்கள் தொடர்புத்துறை, தலைமைச் செயலகம், சென்னை